# தேசிய நெல் திருவிழா 2025-இல் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை.

இடம் – ஹோலி ஃபளவர் மேநிலைப் பள்ளி தேதி – 28-06-2025

இந்த திருவிழாவில் கலந்து கொள்ள வந்திருக்கும் விவசாய பெருமக்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய அன்பான வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் தான் இந்த உலகம் இயங்குவதற்கு அடிப்படையாக இருக்கிறார்கள். "சுழன்றும் ஏர் பின்னது உலகம்", "உழுவார் உலகத்திற்கு ஆணி" என்று 3000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொல்லி இருக்கிறார். அது இன்று வரை உண்மையாகவே இருக்கிறது. அதனால் நீங்கள் எல்லோரும் கலந்து கொள்ளும் இந்த விழாவில் கலந்து கொள்வதிலும், விவசாயம் பற்றியும் விவசாயிகளின் நலன் பற்றியும் பேச வாய்ப்பு கிடைத்ததிலும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இயற்கை விவசாயம், பாரம்பரிய பயிர் வகைகள் பற்றி கட்டாயம் பேச வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். உங்களில் பலருக்கு தெரிந்து இருக்கும். இந்தியா சுதந்திரம் அடைந்த போது, நம்முடைய விவசாய உணவு உற்பத்தி குறைவாக இருந்தது. தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி, உணவு தட்டுப்பாடு அந்த காலகட்டத்தில் ஏற்பட்ட "பெங்கால் பஞ்சம்" – இந்த அனுபவங்கள் இந்தியாவை உணவுப் பாதுகாப்பு பற்றிய பெரிய அச்சத்தில் வைத்தது.

மிகப் பெரிய ஜனத் தொகை கொண்ட இந்தியாவின் உணவு தாணிய பற்றாக்குறையை சமாளிக்க அதிக அளவில் உணவுப் தானியத்தை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது. 1965 வரை கூட அமெரிக்காவில் இருந்து PL-418 ரக கோதுமையை இறக்குமதி செய்து கொண்டு இருந்தோம். அந்த நிலையில் தான் உணவு தானிய உற்பத்தியில் ஒரு நிலையான தீர்வை தேடினோம். அப்போது, 1960 களில் "பசுமை புரட்சி" அறிமுகம் செய்யப்பட்டது. இந்திய விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் தலைமையில் அது நடைமுறைக்கு வந்தது. உயர் தரமான வீரிய விதைகள் - IR-8 போன்ற நெல் - கோதுமை விதைகள் அறிமுகம் ஆனது. உற்பத்தியை அதிகரிக்க ரசாயன உரங்களை பூச்சி கொல்லிகளை பயன் படுத்தினோம். தொழில் நுட்பத்தை புதிய புதிய எந்திரங்களை பயன் படுத்தினோம். அதற்காக பசுமை திட்ட நதி என்று வங்கிக் கடன்கள் தரப்பட்டது. நெல், கோதுமை உற்பத்தியில் வளர்ச்சி அடைந்தோம். இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்நிறைவு பெற்ற நாடாக மாறியது.

ஆனால் அதில் சில தவறுகள் நடைபெற்றது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். வீரிய ரகங்களை பயன்படுத்தியதால் நம்முடைய பாரம்பரிய விதை ரகங்கள் மறைந்து போய்விட்டது. ரசாயண உரங்களும் பூச்சி கொல்லி மருந்துகளும் நம்முடைய மண்ணின் வளத்தை அழித்து விட்டன. பாசன நீர் அதிகம் தேவைப்பட்டதால் நம்முடைய நீர் ஆதாரங்கள் அழிந்து போயின.

பசுமை புரட்சி, இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்தது. ஆனால் அது சமூதாய – சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பாக இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ரசாயண மருந்துகளின் பயன்பாட்டால் மனித சமுதாயம் புதுப்புது வியாதிகளை, நோய்களை சந்தித்து வருகிறது. நாம் செய்த தவறுகளில் இருந்து விலக வேண்டும் என்ற புரிதல் அப்போது ஏற்பட்டது. நம்முடைய பாரம்பரிய – இயற்கை விவசாயம் நோக்கி நம்முடைய கவனம் திரும்பியது. பாரம்பரிய நெல் வகைகளை தேடிப் பிடித்து பயிரிட தொடங்கினோம். நமக்கு ஆரோக்கியத்தையும் உடல் பாதுகாப்பையும் தரும் தானியங்களை மீண்டும் பயிர் செய்ய உற்சாகம் காட்டுகிறோம். நம்மாழ்வார் போன்றவர்கள், ஜெயராம் போன்றவர்கள் இதை ஒரு இயக்கமாகவே நடத்தினார்கள். இப்போது அந்த விழிப்புணர்வு மிகப் பரவலாக எல்லோரையும் சென்று சேர்ந்து இருக்கிறது. நாம் இயற்கை விவசாயத்தை நோக்கி திரும்பிக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய பாரம்பரிய விதைகளை தேடிப் பிடித்து அவற்றை சாகுபடி செய்யவும் பாதுகாக்கவும் முயற்சி தொடர்ந்து நடத்து வருகிறது.

இப்போது சாமானிய மனிதர்களும் இயற்கை விவசாயம், பாரம்பரிய உணவு என்று பேசுகிறார்கள். விவாதிக்கிறார்கள். பொன்னி அரிசி, கருப்பு கவுணி, மாப்பிள்ளை சம்பா, சீரக சம்பா, குதிரை வாலி, திணை, வரகு, சாமை என்று பேசுவதை நாம் கவனிக்க முடிகிறது.

*(இது போல லட்சத்திற்கு மேற்பட்ட பாரம்பரிய தானிய வகைகள் நம்மிடம் இருந்ததாக சொல்கிறார்கள். அதில் சுமார் 3,000 வகை மட்டுமே இப்போது பாதுகாக்கப்படுகிறது.)* ஊர்களில், நகரங்களில் எங்கு திரும்பினாலும் "ORGANIC FOOD", "ORGANIC FRUITS & VEGETABLES" என்ற எழுதி இருப்பதை பார்க்கிறோம். கேட்பதற்கும் பார்ப்பதற்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நம்மாழ்வார் போன்றவர்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வுதான் அதற்கு காரணம். அதுதான் அவர்கள் எடுத்த முயற்சியின் வெற்றி.

அரசுகளே இயற்கை விவசாயம், பாரம்பரிய விவசாயத்தை ஊக்கப்படுத்தி வருகிறது. அதற்காக பல சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு, தேசிய இயற்கை வேளாண்மை திட்டம் (NMNF), பாரதப் பிரதமர் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKYF) போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பொதுவாகவே, விவசாயத்தை மேம்படுத்த, சிறு-குறு விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற பாரதப் பிரதமரின் வேளாண் வளர்ச்சித் திட்டம் PMKSY, பாரதப் பிரதமரின் வேளாண் விரிவாக்கத் திட்டம் PMVY FASAL BHIMA YOJANA என்ற பாரதப் பிரதமரின் பயிர் பாதுகாப்பு திட்டம் PMFBY, விவசாய கடன் அட்டை திட்டம் போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. PM Kisan என்ற பாரதப் பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டம். விவசாயிகளின் அன்றான செலவிற்காக

வருடத்திற்கு ரூ. 6,000 தரும் திட்டம். இது, விவசாயிகளில் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை எற்படுத்தி இருக்கிறது.

விவசாயத்தையும் விவசாயிகளின் வளர்ச்சியையும் மனதில் வைத்து இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை கொண்டு வந்ததற்காக மத்திய அரசுக்கு நாம் நன்றி சொல்லியாக வேண்டும். இதை எல்லாம் தாண்டி 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்தது. இந்த முயற்சி நம்முடைய விவசாயிகளை உலக சந்தையில் முன்னோடிகளாக நிறுத்தி இருக்கிறது. இப்போது எண்ணெய் விதைகளில் தன்னிறைவு அடைவதில் “**ATMANIRBHARTA“** –வில் கவனம் செலுத்துகிறது.

புதுச்சேரியில் FENGAL புயலின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 30,000 வரை அரசு இழப்பீடு வழங்கியது. அவர்களுடைய கடன் சுமையை முழுவதுமாக போக்க மத்திய அரசுடன் பேசி சுமார் ரூ. 11 கோடி அளவில் கடன் தொகை, வட்டி, அபராத வட்டி எல்லாவற்றையும் தள்ளுபடி செய்தது. இங்கே இந்த திருவிழாவில் கலந்து கொள்ள வந்திருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு என்னுடைய வேண்டுகோள் இதுதான். அரசின் திட்டங்களை பயன்படுத்தி கொள்ளுங்கள். இவை எல்லாம் உங்களுக்கான திட்டம். உங்களை மனதில் வைத்து உருவாக்கப்பட்ட திட்டம். ஒட்டுமொத்தமான மனித சமுதாயத்தின் பாதுகாவலனாக அவர்களுக்கு உணவு தரும் விவசாயிகளின்

முன்னேற்றத்திற்காக கொண்டு வரப்பட்ட திட்டம். விவசாயிகள் நலமாகவும் வளமாகவும் வாழ வேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையில் எற்படுத்தப்பட்ட திட்டம்.

இன்றைய இளைஞர்களிடம் ஆண்கள் பெண்கள் இருவரிடமும் நான் கேட்பதெல்லாம், நீங்கள் இயற்கை வழி விவசாயத்தில் கவனம் செலுத்துங்கள். பாரம்பரிய நெல் பயிர் சாகுபடி செய்யுங்கள். இயற்கையை பாதுகாக்க, இந்த பூமியை பாதுகாக்க இதை ஒரு இயக்கமாக மாற்றுங்கள். புரிந்து கொள்ளுங்கள், நாட்டின் வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் வளர்ச்சி மல்ல. அனைவரின் வளர்ச்சிதான் முழுமையான வளர்ச்சி. எத்தனை தான் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டாலும் விவசாயிகள் உணவு உற்பத்தி செய்யவில்லை என்றால் மற்ற எல்லா வளர்ச்சிகளும் தேங்கிக் போய்விடும். நாடு விடுதலை அடைந்த 100-வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதமாக இருக்க வேண்டும் என்பது பாரதப் பிரதமரின் எண்ணம். அதை நீங்கள்தான் வழிநடத்தப் போகிறீர்கள். நாம் அதை நோக்கி பயணிக்கிறோம். அதற்கு ஆரோக்கியமான மனித வளம் தேவை. நம்முடைய பாரம்பரிய நெல் மற்றும் தானிய வகைகள் வளமான- பலமான பாரதத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையோடு. பாரம்பரிய நெல் தானிய வகைகளை ஊக்குவிப்போம், இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவோம் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். **நன்றி... வணக்கம்... ஜெய் ஹிந்த்...**